

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், ஏரசணாம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட நாரணவலசு, எல்லப்பாளையம் பகுதியில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன், விஜியகுமார், கதிர்வேல், கொல்லங்கோவில் சந்திரசேகர், பேரூர் செயலாளர் சரவணன், வர்த்தக அணி அமைப்பாளர் காகம் சேகர், சென்னிமலை முன்னாள் தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவாக தாராபுரம் நகர பகுதிக்குட்பட்ட கொளஞ்சிவாடி, ஹவுசிங் போர்டு மக்களைச் சந்தித்து திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தாராபுரம் நகரக் கழக செயலாளர் எஸ். முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் உள்பட திருச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தாராபுரம் நகர, வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் மேற்கு ஒன்றியம், கிளாங்குண்டல் ஊராட்சி செம்மாண்டகவுண்டன் புதூரில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் வீரா சாமிநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர் துரை.தமிழரசு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து குண்டடம் மேற்கு ஒன்றியம் ஜோதியம்பட்டி ஊராட்சியில் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர் முன்னிலையில் பட்டிமன்ற சிறப்பு பேச்சாளர் மஞ்சுநாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியன், இராஜபாளையம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.பி.ராஜான், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அல்தாப் உசேன், ராஜு, கிரிகதிர்வேல், பேரூர் கழக செயலாளர்கள் கனகராஜ், கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர்கள் நடராஜ், ஆட்சிபட்டி பாலு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து சேரன் நகர், காந்தி நகர் பகுதியில் முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நகரக் கழகச் செயலாளர் முருகானந்தம் ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தளவாய்பட்டினத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் கழக இலக்கிய அணி துணைத்தலைவர், முன்னாள் எம்.எல். ஏ., கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாவட்டப் பொருளாளர், துணை மேயர் எம்.லியாகத் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர், கழக தொண்டர் அணி துணை செயலாளர் சுப.சரவணன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, ஒன்றிய செயலாளர்கள் சி.சண்முகம், ஆர்.ஆர். சாமிநாதன், புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், அவைத் தலைவர் அ.ரெத்தினம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர்கள் த.செல்வம், கே.பழனிச்சாமி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், கோ.மணிராஜன், தலைமை கழக பேச்சாளர்கள் தமிழினியன், வரகூர் காமராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன், ராகவன் ஆதிமூலம், அண்ணாதுரை, கன்னியப்பட்டி முருகேசன், ரெங்கராஜ், ரமேஷ் பாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழிகாட்டுதலின்படி கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர், துரை செந்தமிழ்செல்வன் ஆலோசனையின்படி குண்டடம் மேற்கு ஒன்றியம், நந்தவனம்பாளையம் ஊராட்சி 24 வது பாகத்திற்குட்பட்ட காணிக்கம்பட்டி கிராமத்தில் கோவை மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் பொதுக்குழு உறுப்பினர் ச.கார்த்திகேயன், பகுதி பொறுப்பாளர் டெம்போ சிவா, வழக்கறிஞர் மணிவேல், இரா.நாகராஜ், ராஜன், கிளை செயலாளர் கனகராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட எடைகள்பாடி ஊராட்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் துரை.தமிழரசு, ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளர் தோப்பு சதாசிவம், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், சித்தோடு பேரூர் செயலாளர் முத்துகிருஷ்ணன், நசியனூர் பேரூர் செயலாளர் மோகனசுந்தரி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் விக்னேஷ் ஆகியோர் வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் ஈரோடு ஒன்றியக் கழக நிர்வாகிகள், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து பொட்டிக்காம்பாளையம் ஊராட்சி, சித்தூர் பகுதியில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், பொள்ளாச்சி தெற்கு மத்திய ஒன்றியச் செயலாளர் கமலக்கண்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.